12.02.2026

OS No: 187/2021

பி.வா.சா. 2 - செல்வராஜ் த/பெ. சின்னகாளை

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் மேலபட்டி கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தேனா என்றால் இருந்தேன். நான் பஞ்சாயத்து தலைவராக பணிபுரிந்து போது 2ம் பிரதிவாதி பழனியப்பன் அலுவலக உதவியாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். மேற்படி 2ம் பிரதிவாதி காதல் திருமணம் செய்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி காதல் திருமணம் செய்த சமயத்தில் அவருக்கு ஏற்பட்ட பிரச்சணையை நான் முன் நின்று சரி செய்தேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி காதல் திருமணம் செய்த சமயத்தில் 3 வருடங்களாக வெளி ஊரில் இருந்தார் என்றால் 3 வருடங்களாக இல்லை 1 வருடத்திற்குள்ளாக தான் இருந்தார். ஆனால் அலுவலகம் வந்து செல்வார். 1ம் பிரதிவாதி கருத்தசாமிக்கு வாதி பெரியணன் 2வது மகன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கருத்தசாமிக்கு மூத்த மகன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வெளி ஊரில் இருந்த சமயத்தில் வாதியும் 1ம் பிரதிவாதியும் ஒன்றாக இருந்தார் என்றால் சரிதான். சீதா என்பவர் வீட்டில் 1ம் பிரதிவாதி பண்ணைக்கு வேலைக்கு இருந்தார் என்றால் இல்லை. அவருடைய காட்டில் விவசாயம் செய்தார். நான் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள 1ம் பிரதிவாதி 200 செம்மறி ஆடுகளும், 100 வெள்ளாடுகளும் உழவு மாடு 4 ஜோடி மற்றும் 10 பசு மாடுகள் வளர்த்து வந்ததாக சங்கதி உண்மையல்ல என்றும் மேற்படி ஆடு, மாடுகள் சீதா என்பவருக்கு சொந்தமானது என்றும் அவற்றை தான் 1ம் பிரதிவாதி பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா வழக்கு என்ன பரிகாரம் கேட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 50/2 ஆகும். மேற்படி சொத்து வாதிக்கு எப்படி பாத்தியம் என சங்கதி குறிப்பிட்டுள்ளார் என தெரியும் என்றால் தெரியாது. வாதிக்கு தாவா சொத்தை எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதியில் நான் கிரையம் வாங்கி கொடுத்தேன் என்றால் 2008 வருடத்தில் எனது வீட்டில் வைத்து

தான் கிரையம் பேசினேன் தேதி மாதம் தெரியாது. 1ம் பிரதிவாதி கருத்தசாமிக்கு பச்சையம்மாள், முத்துலெட்சுமி, ஆறுமுகராணி என 3 பேர் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். பச்சையம்மாளும் அவருடைய கணவரும் இறந்துவிட்டார்கள் என்றால் இறந்துவிட்டதாக சொன்னார்கள். யார் மேற்படி நபர்கள் இறந்ததாக சொன்னார்கள் என்றால் பழனியப்பன் சொன்னார். பச்சையம்மாளின் குழந்தைகளை வாதி தான் வளர்த்து பராமரித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்வதில் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் எவ்வளவு பணம் என்று தெரியாது. பணம் கொடுத்ததாக 1ம் பிரதிவாதி என்னிடம் சொன்னார். கருத்தசாமியின் இளைய மகளுக்கு திருமணம் செய்து வைத்த விவரம் தெரியுமா என்றால் கருத்தசாமி சொல்லி தெரியும். வாதி பெயரிணன் வெளிநாட்டில் 4, 5 வருடங்கள் வேலை பார்த்தார் என்றால் இருக்கலாம். வாதிக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்பு இருந்தே வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். வெளிநாட்டில் வேலை பார்த்த போது வாதி பெற்ற வருவாயை அவரது அப்பாவிற்கும் அண்ணனுக்கும் அனுப்பி வைப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தான சர்வே எண். 50/2 ஐ வாதிக்கு இனாம் செட்டில் மெண்ட் எழுதி கொடுத்த விவரம் 1ம் பிரதிவாதி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி பெரியணன் வெளிநாட்டில் வேலை பார்த்து அனுப்பி வைத்த பணத்தை கொண்டு தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றும் அதனால் தான் வாதி பெயருக்கும் 1ம் பிரதிவாதி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திவிட்டார் என்றும் சொன்னார். என்னிடம் 1ம் பிரதிவாதி கருத்தசாமியும் 2ம் பிரதிவாதி பழனியப்பனும் பணம் கொண்டு வந்து கொடுத்தார்கள். மேற்படி பணத்தை கிரையத்திற்கு நான் கொடுத்தேன். 1, 2 பிரதிவாதி என்னிடம் கொடுத்த பணம் அவர்களுக்கு யார் கொடுத்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் செய்த போது 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்யும் அளவிற்கு வருவாய் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலமாக தாவா

சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுத்த பிறகு வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட மன வருத்தம் காரணமாக மேற்படி இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் உரிமை மாற்றம் செய்திட 1ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர்கள் தான் சாட்சியம் அளிக்க அழைத்தார்கள் எனக்கு தெரிந்ததை நான் சொல்கிறேன். தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் வாங்கி கொடுத்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பிரதிவாதிக்கு ஆதரவாக மேற்படி வாதி பிரதிவாதிகள் குடும்பத்திற்குள் நடைபெறும் பிரச்சனை குறித்து தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.12 13:51:30 +0530